**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 59-2016**

**Prosecution witness : அ.சா.7** **Date : 11.03.2024**

| | |
|---|---|
| **Name : வேல்குமார்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 3, 8 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ரெட்டிக்காட்டில் குடியிருந்து கடைவைத்து நடத்தி வருகிறேன். அ.சா1 எனது எதிர் கடையில் இருப்பர் ஆவார். கடந்த 25.04.2015 ம் தேதியன்று இரவு 12 மணியளவில் அ.சா1 என்னிடம் ஆறுமுகம் மற்றும் அவருடன் வந்த நான்கு பேர் அவர் வீட்டில் இருந்த பணம் மற்றும் நகை ஆகியவற்றை திருடி சென்றதாக என்னிடம் மறுநாள் தெரிவித்தனர். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

2). சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் யார் என்று எனக்கு தெரியாது. அ.சா1 சொல்லி தான் அனைத்து விபரமும் தெரியும் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/-தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 59-2016**

**Prosecution witness : அ.சா.8** **Date : 11.03.2024**

| **Name : பத்மநாபன்** | **Caste :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused others present. ) (Accused 3, 8 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது காவல் துறையிலிருந்து பணி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 2015ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது சாந்தி க/பெ சம்பத் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமாக புகார் மனுவை கடந்த 26.04.2015-ம் தேதியன்று பெற்று புகார் மனுவின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண்.361/2015 ச/பி 451, 419, 420 இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும்.**

2) பின்னர் புகார்மனு மற்றும் அசல் முதல்தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தபட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

3) என்னிடம் புகார் கொடுக்கும்போது காலை 08.00 மணிக்கு என்றால் சரிதான் புகார் எழுதிக்கொண்டு வந்தார்கள் என்றால் சரிதான். யார் புகார் கொண்டுவந்தார் என்றால் சாந்தி எழுதிக்கொண்டுவந்தார். சம்பவம் இடத்தை நான்

பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் பொய்யான புகாரை பெற்று விசாரிக்காமல் முதல் தகலறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/–தே.மயில்சாமி,**
**குற்றவியல் நீதித்துறை எண்.2**
**மேட்டூர்.**